நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper

பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 01 (17 - 09 - 1992) வியாழக்கிழமை ஓசை 212

## நிவாரண விண்ணப்பங்கள் நிதி இன்மையால் தேக்கம்

மட்டக்களப்பு மாவட்த்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க பத்தரைக் கோடி ரூபா அவசரமாகத் தேவைப்படுவதாகவும் நிதிஇன்மையால் வழங்க முடியாதிருப்பதாகவும் மட்டக்களப்பு மாவட்டபுனர்வாழ்வு அலுவலக திட்டப்பணிப்பாளர் எஸ். பி. ஓக்கஸ் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர்மேலும் விபரிக்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களில் மரணமான மற்றும் காயமடைந்தோருக்கு நஷ்டஈடு வழங்க 10 கோடியே 60 இலட்சம் ரூபா தேவைப்படுகிறது. நஷ்டஈடுகோரி விண்ணப்பிக்கப்பட்ட 400 விண்ணப்பங்கள் நிதி இன்மையால் முடங்கிக்கிடக்கின்றன. புனர்வாழ்வு அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட நிதிகடந்த ஜுலை மாதத்துடன் (4ஆம்பக்கம் பார்க்க)

# நெருக்கடி நிலையில் விமானப்படை

# விமானிகள், தளபாடப் பற்றாக்குறை

## நிவர்த்தி செய்ய அரசு தீவிர முயற்சி

[கொழும்பு]

இவ்வருடத்தில் சிறிலங்கா விமானப்படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்புக்களைத் தொடர்ந்து விமானப்படை பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளது பெரியளவிலான பயிற்சி பெற்ற விமானிகள் கொல்லப்பட்டமையும், விமானங்களின் இழப்பும், உதிரிப்பாகங்களின் பற்றாக்குறையுமே இந் நெருக்கடிக்குக் காரணம் எனத் தெரியவருகின்றது. இதேவேளை இந் நெருக்கடிகளைத் தீர்க்க சிறிலங்கா அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்து வருவதாகவும் தெரிகின்றது.

இவ்வருட ஆரம்பத்தில் சீனன்குடா விமானப்படை தளத்தில் ஏற்பட்ட பாரிய குண்டு வெடிப்பினால் சிறிலங்கா விமானப்படை விமானங்கள், உலங்கு வானூர்திகள் பெருமளவில் சேதமடைந்ததோடு பல விமானிகளும் கொல்லப்பட்டனர். இதேவேளை கிழக்கில் புலிகளின் அதிரடித் தாக்குதலினாலும் பல விமானப்படையினர் இவ்வருடத்தில் பலியாகினர். இவற்றோடு விடுதலைப் புலிகளால் ஆனையிறவில் சுட்டு வீழ்த்தப்பட்ட வை-8 விமானத்தில் இருந்த 19 விமானப் படையினரும் கொல்லப்பட்டனர். இப்பத்தொன்பது பேரில் சிறிலங்கா விமானப்படையின் மிக உயர் பதவி வகித்த பல நாடுகளில் பயிற்சி பெற்ற விமான ஓட்டிகளும் இருந்தனர் என்பது தெரிந்ததே.

இவ் இழப்புக்கள் குறைந்தளவு விமானிகளையும் சிறந்த பயிற்சியைப் பெற்றவர்களையும் கொண்ட சிறிலங்கா விமானப்படைக்குப் பேரிழப்பாகவே இருந்தது. இந்நிலையில் விமானப்படைக்கு புதிய ஆள்சேர்க்கும் முயற்சியில் விமானப்படை இறங்கியுள் [4 ஆம் பக்கம் பார்க்க]

## மூன்று இளைஞர்கள் வவுனியாவில் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்துயாழ்ப்பாணம் நோக்கிவந்தமூன்று யாழ் இளைஞர்கள் வவுனியா தடைமுகாமில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் வாசிகளான இம் மூன்று இளைஞர்களில் ஒருவர் குறடுகள், சாவிகள் கொண்டு வந்ததாகவும் அதனால் இவர்கள் தாக்கப்பட்டு, கொண்டு செல்லப்பட்டதாக அங்கிருந்து வந்த பயணி ஒருவர் தெரிவித்தார். (05)

## காரைநகரிலிருந்து எறிகணைத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் இருந்துமூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினரால் பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது- நேற்று நண்பகல் 1.30 மணியளவில் மேற்படி பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான கலிபர்த் தாக்குதலும், பீரங்கித் தாக்குதலும் நடாத்தப்பட்டது. இதனால் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர். (௧)

## அக்டோபர் 2இல்

## வடக்கு-கிழக்குஇணைப்புபற்றி

## வவுனியாவில்

## காரியாலயம், பாடசாலைகள்

# தியாகி திலீபனுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தியாக மரணமடைந்த தியாகதீபம் லெப் கேணல் திலீபனுக்கு தமிழீழ மக்கள் இரண்டாவது நாளாக நேற்று நிறைவு நினைவு நாட்களை ஒட்டி நேற்று தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் உணர்வு பூர்வமான அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



அஞ்சலி செலுத்தினர்.
திலீபனின் ஐந்தாம் ஆண்டு

வீதிகளின் கேந்திர நிலையங்கள், மற்றும் மக்கள் கூடும் பொது இடங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், வீட்டு வாயில்கள் போன்ற பல்வேறு இடங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் தியாகி திலீபனின் உருவப் படத்திற்கு மக்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். நேற்று அதிகாலை நித்திரை விட்டெழுந்ததும் மலர்களைச் சேகரித்து மாலை தொடுத்தனர். [4 ஆம் பக்கம் பார்க்க]

## திலீபன் நினைவாக இன்றையசிரமதான பணிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகிலெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் அங்கமாக இன்று பல்வேறு இடங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

லவனிதா குடியிருப்பில் வசிக்கும் மக்களால் இக்குடியிருப்பில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பருத்தித்துறை வட்டப் பிரிவில் இளங்கோ, நக்கீரன் சனசமூக நிலையங்களின் ஆதரவில் அல்வாய் வடக்கு மக்களால் பாபுவீதி புனரமைக்கப்படவுள்ளது.

கரவெட்டி வட்டப்பிரிவில் பாரதிதாசன் சனசமூகநிலைய (4 ஆம் பக்கம் பார்க்க)

## குமணவில் வந்த

## அடகு நகை

## பழுதடைந்த தானியங்களை

குண்டு வெடிப்பினால் சிறிலங்கா விமானப்படை விமானங்கள், உலங்கு வானூர்திகள் பெருமளவில் சேதமடைந் அதிரடித் தாக்குதலினாலும் பல விமானப்படையினர் இவ் வருடத்தில் பலியாகினர். இவற்றோடு விடுதலைப் புலிக படையினரும் கொல்லப்பட்டனர். இப்பத்தொன்பது பேரில் சிறிலங்கா விமானப்படையின் மிக உயர் பதவி வகித்த பல நாடுகளில் பயிற்சி பெற்ற விமான ஓட்டிகளும் இருந்தனர் என்பது தெரிந்ததே.

யும் கொண்ட சிறிலங்கா விமானப்படைக்குப் பேரிழப்பாகவே இருந்தது. இந்நிலையில் விமானப்படைக்கு புதிய ஆள்சேர்க்கும் முயற்சியில் விமானப்படை இறங்கியுள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மூன்று இளைஞர்கள் வவுனியாவில் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்துயாழ்ப்பாணம் நோக்கிவந்தமூன்று யாழ் இளைஞர்கள் வவுனியா தடைமுகாமில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் வாசிகளான இம் மூன்று இளைஞர்களில் ஒருவர் குறடுகள், சாவிகள் கொண்டு வந்ததாகவும் அதனால் இவர்கள் தாக்கப்பட்டு, கொண்டு செல்லப்பட்டதாக அங்கிருந்து வந்த பயணி ஒருவர் தெரிவித்தார். (05)

## காரைநகரிலிருந்து எறிகணைத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் இருந்துமூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினரால் பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டது-

நேற்று நண்பகல் 1.30 மணியளவில் மேற்படி பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான கலிபர்த் தாக்குதலும், பீரங்கித் தாக்குதலும் நடாத்தப்பட்டது. இதனால் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான பகுதிகளில் தஞ்சம் புகுந்தனர். (க)



அஞ்சலி செலுத்தினர்.
திலீபனின் ஐந்தாம் ஆண்டு

வீதிகளின் கேந்திர நிலையங்கள், மற்றும் மக்கள் கூடும் பொது இடங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், வீட்டு

அதிகாலை நித்திரை விட்டெழுந்ததும் மலர்களைச் சேகரித்து மாலை தொடுத்தனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திலீபன் நினைவாக இன்றையசிரமதான பணிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் அங்கமாக இன்று பல்வேறு இடங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

லவனிதா குடியிருப்பில் வசிக்கும் மக்களால் இக்குடியிருப்பில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பருத்தித்துறை வட்டப் பிரிவில் இளங்கோ, நக்கீரன் சனசமூக நிலையங்களின் ஆதரவில் அல்வாய் வடக்கு மக்களால் பாபுவீதி புனரமைக்கப்படவுள்ளது.

கரவெட்டி வட்டப்பிரிவில் பாரதிதாசன் சனசமூகநிலைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அக்டோபர் 2இல்

# வடக்கு-கிழக்குஇணைப்புபற்றி தெரிவுக் குழு முடிவு எடுக்கும்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுக்காக அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம், ஐந்தாம் திகதிளிகல் மீண்டும் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையாக வரையறுப்பதா இல்லையா என்பது இக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது அத்துடன் அதிகாரப்பரவலின்அலகுபற்றி பரிசீலனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தெரிவுக்குழு நேற்று முன்தினம் கூடி நிதி சம்பந்தமான விவகாரங்களை ஆராய்ந்ததாகவும் இந்த விடயம் தொடர்பாக இம்மாதம் 29 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியாவில் மீளளிப்பதில்

## அடகு நகை காலதாமதம்

(வவுனியா)

வவுனியா மக்கள் வங்கி கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீள வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் ஜனாதிபதி இடம் பெயர் சேவை நிகழ்விற்குப்பின்னர் பணம் செலுத்தப்பட்ட அடகு நகைகள் மீள வழங்கப்படும் என்றும் அடகு நகைகள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் வவுனியா மக்கள் வங்கி கிளை அறிவித்திருந்தது.

இதன் பிரகாரம் ஏராளமான நகை தொடர்ந்து அட

(4 ஆம் பக்கம் பார்க்க)

### குமணவில் வந்த

## பழுதடைந்த தானியங்களை செஞ்சிலுவை குழுபார்த்தது

யாழ் மாவட்டத்துக்கு அண்மையில் ''குமண'' கப்பல் மூலம் வந்து சேர்ந்த பழுதடைந்த தானியங்களை சர்வசேத செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பார்வையிட்டனர்.

''குமண'' கப்பலில் எடுத்துவரப்பட்ட பழுதடைந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இரத்மலானை கொள்ளை சந்தேகநபர்

## பொலிஸ் காவலில் தூக்கில் தொங்கினார்

(கொழும்பு)

இரத்மலானை ரயில்வே வேலைத்தலத்தில்நடைபெற்ற ஐம்பது லட்சம் ரூபாய் சம்பள பணம் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதாகி துறைமுக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் சிறைக்கூடத்தில் தொங்கிய நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜமால்தீன் என்ற இந்த சந்தேகநபர் தனது சேர்ட்டை கிழித்து கயிறாக திரித்து தற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழரிடம் கொள்ளையிட்டோர் கைது

(கொழும்பு)

தம்மை இரகசியப் பொலிசார் என அறிமுகப் படுத்திவிட்டு தமிழர் வீடுகளில் கொள்ளையிலீடுபட்டு வந்த ஆறுபேரைக் கொண்ட கொள்ளைக்கோஷ்டி ஒன்றைக் கொழும்பு பொலிசார் கைது செய்துள்ளனர்

இக் கோஷ்டியினர் கொழும்பு, கோட்டை, வெள்ளவத்தை, நாரேன்பிட்டிய பகுதிகளில்வாழும் தமிழர் வீடுகளுக்குள் புகுந்து அவர்களைப் புலிகள் எனக்கூறி அவர்களிடமிருந்த பொருட்களை அபகரித்துக் கொண்டு அதற்கு ரசீதுகளும் வழங்கியுள்ளனர்.

இதன் போது இவர்கள் தமிழ் மக்களிடம் நீங்கள் உங்களது ஆளடையாளங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்டத்திற்குரிய கட்டுநிதி;

## யாழ். அரசாங்க அதிபர் பாஸ்கரலிங்கத்துடன் பேச்சு

கொழும்பில் தங்கியிருக்கும் யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நிதி அமைச்சின் செயலாளர் திரு, ஆர். பாஸ்கரலிங்கத்துடன் பேச்சு நடத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்குரிய கட்டு நிதி வழங்கல் தொடர்பாக எழுந்துள்ள புதிய பிரச்சினை தொடர்பாகவே அவர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கு இவ் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டதனால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எல்லை பகுதியில் குடியமர சிங்களவர்கள் மறுப்பு

### பூரண பாதுகாப்பு வேண்டுமாம்

எல்லைப்புற கிராமங்களின் பாதுகாப்பு பூரணமாக உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே மீண்டும் தாம் குடியேறச் செல்லமுடியும் என்று அங்கிருந்து வெளியேறிய சிங்கள மக்கள் கூறியுள்ளனர்.

கொழும்பில் கடந்த ஏழாம் திகதியன்று உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்த வவுனியா எல்லைப்புற கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்த சிங்களவர்கள் இவ்வாறு கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

இராணுவ அதிகாரி திலகரட்ணா மற்றும் இரு:பொலிஸ் உயர் அதிகாரிகள் எல்லைப்புற பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்டிருப்பதாககூறியிருந்தபோதிலும், அங்குள்ள பௌத்த விகாரையிலேயே சிங்களவர்கள் தொடர்ந்தும் தங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது.

### நிவாரண வெட்டைக் கண்டித்து

## புதுக்குடியிருப்பில் மக்கள் நேற்றுக் கண்டனப் பேரணி

சிறிலங்கா அரசாங்கம் உலர் உணவு நிவாரணத்தை அரைப்பங்காக குறைத்தமை, பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படாமை என்பவற்றைக் கண்டித்து முல்லை மாவட்டத்தை சேர்ந்த மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இப் பேரணியானது

(4 ஆம் பக்கம் பார்க்க)

**காற்றுள்ள போதே தூற்றிக்கொள்**
**நீர் கிடைக்கும் போதே சேர்த்துக் கொள்**


# தியாகி திலீபனின் தற்கொடையை

புரிந்துகொள்வோம் - செயற்படுவோம்

- வர்த்தகர் சங்கம், சுன்னாகம்.

சி 5059

# வரி விளம்பரம்

**பாலராசிரியர் பயிற்சி**

பாலராசிரியர் பயிற்சியில் க. பொ. த. (சா/த) சித்தியடைந்தவர்கள் சேரலாம். நேரில் பயில முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி—யாழ்ப்பாணம். (3187)

**கடிகாரமா? றேடியோவா?**

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு எமக்கு வேறு கிளைகள் கிடையாது. டில்கா வாச்வேக்ஸ். 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி/4964)

**தவறி விட்டது**

செல்லத்துரை மகேஸ்வரி என்பவர் 1992-09-14 திங்கட்கிழமை கைதடியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து உரும்பராய்க்கும் பஸ்சில் பயணம்செய்த போது கைக்குட்டையில்முடிந்தபடி சங்கிலி ஒன்றும் ''C'' அடையாளம் பதித்த மோதிரம் ஒன்றும் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாதம்' காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (3181)

தம்பையா வேலாயுதம் (பரந்தன், முரசுமோட்டை) என்பவருடைய அடையாள அட்டை சாவகச்சேரி - யாழ்ப்பாணத்திற்குமிடையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 211 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (3185)

A. K. யோசவ் என்பவரது கடவுச் சீட்டு (Passqort) 24-08-92 கிளாலியிலிருந்து வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 115, சென் பற்றிக்ஸ் றோட் யாழ்ப்பாணம் என்ற முகவரியில ஒப்படைக்கவும். அல்லது மேற் கண்ட விலாசத்திற்கு தபாலில் அனுப்பிவைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3190)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் தாதிப்பதவிக்கு விண்ணப்பங்கள் 1992. ஐப்பசி 10ஆம் தேதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பளம்:

ரூபா 3105/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நியமனம் வழங்கப்படும்).

தகைமைகள்:

1. மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் க.பொ த (சாதாரணம்) பரீட்சையில் சித்தி.
2. இலங்கை மருத்துவப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட தாதித் தகுதிச் சான்றிதழ்.

இப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள்செய்யப்படல் வேண்டும் தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப் பெற்ற 23X10 ச மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் இருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்தேதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விபரங்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992. 09 10.
(சி-5053)

---

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)
சுன்னாகம்

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் எல்லைப் பரப்பிற்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் கிளை நிலையங்கள், நாட்டு நிலைமை காரணமாக அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களில் வசிப்பதனால், மூடப்பட்டுள்ளன. சங்கத்தின் சகல கிளைகளின் வாக்காளர் பட்டியலும், 30.9.92உடன் மூடி, கிளைக்குழுத் தேர்தல் நடைபெறவுள்ளமையால், மூடப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் கிளை நிலையங்களின் நிலைகளைப்பற்றிக் கிளைக்குழுவினரை அழைத்து, கலந்துரையாடி முடிவுகள் செய்ய இருப்பதனால், 19.9 92-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் கலந்துரையாடல் நடை பெறும் தயவு செய்து குறித்த கிளைக்குழு உறுப்பினர் சகலரும் தவறாது பங்கு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

கிளை இல. 20 — குப்பிளான்
,, 21 — ஏழாலை வடக்கு
,, 22 — ஏழாலை கிழக்கு
,, 26 — திடற்புலம்
,, 30 — புன்னாலைக் கட்டுவன் வடக்கு

செயலாளர்
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,

---

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

பதவி :- பொதுமுகாமையாளர் - 101 / 4

மேற்படி பதவிக்கு ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கேரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி :
28 - 09 92

1. சம்பள அளவுத்திட்டம் : 1755 - 2805 / 75×6 - 100×6
2. வயதெல்லை : 30 - 45 வரை
3. பிணைப்பணம் : உரொக்கம் ரூபா 10,0 0/- ஆதனப்பிணை ரூபா 25,000/-
4. கல்வி மற்றும் தகைமைகள்

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 5 ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 6 ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுககு குறையாத அனுபவம்,

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டப் பதவி ஒன்றில் 08 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இவ் வெட்டு வருடகால அனுபவத்தில 02 வருடங்களுக்கு குறையாமல் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவி ஒன்றில் அனுபவம.

அல்லது

இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் / க. பொ த. (உயர்தரம்) 03பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இப் பத்து வருடகால அனுபவத்தில் குறைந்தளவில் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவியில் 02 வருடகால அனுபவம்.

குறிப்பு :

1. விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரித்து அனுப்பப்படல் வேண்டும்.
2. கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் பிரதிகளும் வசிப்பிடத் தகைமை, பிறப்புச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடில் அந்த விளக்கம் குறித்து அத்தாட்சிப்படுத்தும் கடிதமும் நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்,
3. கால்நடை வளர்ப்பு, கால்நடை உணவு தயாரித்தல் போன்றனவற்றில் அனுபவம்உள்ளவர்களுக்குவிசேட முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பப் படிவங்கள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவ கடித மேலுறையின் இடது பக்க மேல் மூலை

---

## போராளிகள் நினைவு மலர்

போராளிகளின் நினைவு மலர்கள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோர், வைத்திருப்போர் எமக்கு ஆவணத்திற்கு இரு பிரதிகளை அனுப்பியுதவவும்.

மாவீரர் படிப்பகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்
பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

(3186)

---

## 31 - ம் நாள் நினைவஞ்சலி



மண்ணிற்கு
1930 - 11 - 28

விண்ணிற்கு
1992 - 08 - 18

**பிலிப் அந்தோனிப்பிள்ளை**
[ ஐயா ]

கையாலாகா வினையில்லை
கலையில் நகையே அவரெல்லை
மையாலெழுதா நற்கருத்தை
மகிழ்வாய் மக்கள் மனத்திருத்தும்
ஐயாவென்னும் முதுகலைஞன்
அந்தோனிப்பிள்ளை பிலிப்பென்பான்
வையாகரணன் தாள்சேர்ந்து
வளர்ந்த முப்பத்தோராம் நாளின்று.

திரு திருமதி அருளானந்தம்
செபமாலை. (இராசாத்தியம்மா)
6/3 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(3180)

---

## நினைவு கூருகின்றோம்..
## 1992 - 09 - 17

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் எமைப்பிரிந்த பீற்றர் (சுப்பையா குமாரவேலு - குமாரவேலு வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு திருக்கோணமலை - அநுராதபுரம் வீதியில் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமககள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட இளங்குடும்பத்தலைவி.

1990 ஆம் ஆண்டு கடவாணையில் எமது முகாம்

பவருடைய அடையாள அட்டை சாவகச்சேரி - யாழ்ப்பாணத்திற்குமிடையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 211 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (3185)

---

A. K. யோசவ் என்பவரது கடவுச் சீட்டு (Passqort) 24-08-92 கிளாலியிலிருந்து வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 115, சென் பற்றிக்ஸ் றோட் யாழ்ப்பாணம் என்ற முகவரியில ஒப்படைக்கவும். அல்லது மேற்கண்ட விலாசத்திற்கு தபாலில் அனுப்பிவைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3190)

---

## சுகாதார அமைச்சர் வடபகுதி வந்தார்

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் வடபகுதி இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு நேற்று வந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவருடன் அமைச்சர் சந்திரா பண்டார, கூட்டுப்படை தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மற்றும் அதிகாரிகளும் வந்திருந்ததாகவும் தெரியவருகிறது

---

பட்டப்பின் படிப்புக் கல்வி டிப்ளோமா

## பகுதிநேரம்/ முழுநேரம் பரீட்சைகள் 1991

மேற்படி பரீட்சைகள் 4-11-92 அன்று ஆரம்பமாக உள்ளன. பரீட்சை அனுமதி அட்டையும், நேர அட்டவணையும் பரீட்சார்திகளுக்கு அனுப்பி வைக்கப்படும். கிடைக்கப் பெறாதவர்கள் 4-11-92க்கு முன்பு பரீட்சைக்கிளையில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

பதிவாளர்.
(சி-5060)

---

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் எல்லைப் பரப்பிற்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் கிளை நிலையங்கள், நாட்டு நிலைமை காரணமாக அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களில் வசிப்பதனால், மூடப்பட்டுள்ளன. சங்கத்தின் சகல கிளைகளின் வாக்காளர் பட்டியலும், 30.9.92 உடன் மூடி, கிளைக்குழுத் தேர்தல் நடைபெறவுள்ளமையால், மூடப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் கிளை நிலையங்களின் நிலைகளைப்பற்றிக் கிளைக்குழுவினரை அழைத்து, கலந்துரையாடி முடிவுகள் செய்ய இருப்பதனால், 19.9 92-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் கலந்துரையாடல் நடை பெறும் தயவு செய்து குறித்த கிளைக்குழு உறுப்பினர் சகலரும் தவறாது பங்கு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

கிளை இல. 20 — குப்பிளான்
,, 21 — ஏழாலை வடக்கு
,, 22 — ஏழாலை கிழக்கு
,, 26 — திடற்புலம்
,, 30 — புன்னாலைக் கட்டுவன் வடக்கு

செயலாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்,
12 09. 92

(5056)

---

## நன்றி நவில்தலும் ஆலய வழிபாடும்

### கபிரியேல் ஞானப்பிரகாசம்

மலர்வு: 08-10-1908
உதிர்வு: 25-07-1992

எனது தந்தையார் காலஞ்சென்ற கபிரியேல் ஞானப்பிரகாசம் அவர்களின் ஆத்ம சாந்திக்காக யாழ்ப்பாணம் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில், இரங்கற் திருப்பலி 19 09-1992 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

நாட்டின் போர்க்காலச் சூழல் காரணமாக என்னால் எனது தந்தையாரின் ஈமக்கிரியையில் பங்கு கொள்ள முடியவில்லை.

அன்னார் 25-07-1992 இல் காலமாகியபோது, அவரின் இறுதியாத்திரைக்கு பலவிதங்களிலும், உதவிசெய்த கள்ளமற்ற வெள்ளை உள்ளங்களுக்கு எமது குடும்பத்தின் சார்பில் நன்றி கூறுகின்றோம்.

தயவு செய்து ஆலய வழிபாட்டிலும், அதைத்தொடர்ந்து நடைபெறும் இல்ல உபசரணையிலும் பங்குகொள்ளும்படி பணிவன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

கவிஞர் - பாஷையூர் தேவதாசன் (மகன்)

ஆளணி உதவியாளர் (Staff - Assistant) மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பாண்டியன்குளம், முல்லைத்தீவு மாவட்டம்.
சத்தியப்பிரமாணம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்,
(தமிழ் - ஆங்கிலம் - சிங்களம்)
மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு.

திருமதி தவபுஸ்பம் தேவதாசன் (மருமகள்)

### பேர மக்கள்

திரு ஜூட் ஜெயேந்திரா
தேசிய பயிலுநர்சபை - கொழும்பு
செல்வன் தே. ரூபேந்திரா - மாணவன்
சென் பேரிஸ் கல்லூரி - சிலாபம்.
செல்வன் தே. தனேந்திரா- மாணவன்
பரி. யோவான் கல்லூரி - யாழ்ப்பாணம்.
செல்வி டயானா தேவதாசன் - மாணவி
சுண்டிக்குழி மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்.
செல்வன் தே. கெவின் சுரேந்திரா - மாணவன்
பரி. யோவான் கல்லூரி - யாழ்ப்பாணம்.

இல: 35/4, அனலாஸ்,
2 ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

(3182)

---

டப் பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இப் பத்து வருட கால அனுபவத்தில் குறைந்தளவில் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவியில் 02 வருடகால அனுபவம்.

குறிப்பு :

1. விண்ணப்பங்கள் யாவும் சுயமாக தயாரித்து அனுப்பப்படல் வேண்டும்.
2. கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் பிரதிகளும் வசிப்பிடத் தகைமை, பிறப்புச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடில் அந்த விளக்கம் குறித்து அத்தாட்சிப்படுத்தும் கடிதமும் நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்,
3. கால்நடை வளர்ப்பு, கால்நடை உணவு தயாரித்தல் போன்றனவற்றில் அனுபவம்உள்ளவர்களுக்குவிசேட முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பப் படிவங்கள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவ கடித மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''பொதுமுகாமையாளருக்கான பதவி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களுக்கு சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-5054

---

பதவி: **சிரேஸ்ட லிகிதர்**

**வயது : 25 — 45 வருடங்கள் வரை**

**சம்பளத்திட்டம் : [302 . 10]**

$$\frac{350/- \ldots 615/-}{15 \times 7 \quad 20 \times 8}$$ (படிகள் தவிர)

கூட்டுறவுச் சங்க ஊழியர் 11ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் - எழுதுவினைஞர் பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச்சங்க ஊழியர் 12ஆம் சம்பளத் திட்டத்தில் எழுதுவினைஞர் பதவியொன்றில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது,

ஐக்கிய இராச்சிய கணக்குப் பதவியாளர்நிறுவனமத்திய பரீட்சையில் சித்தி அல்லது, கூட்டுறவுச்சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் க பொ. த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தி அல்லது,

அரசாங்கம், கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையில் 15 வருடங்களுக்குக் குறையாமல் எழுதுவினைஞராகக் கடமையாற்றியவர்கள், நல்ல திடகாத்திரமான தேக ஆரோக்கியநிலையில் உள்ளவர்களும் ஒப்பந்த அடிப்படையில் கடமை ஆற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம் இவர்களுக்கு வயது எல்லை கவனிக்கப்பட மாட்டாது.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ஆங்கிலம், தமிழில் கடிதத் தொடர்புகள், அறிக்கைகள் முதலியவற்றை சுயமாகத் தயாரித்து தட்டச்சு செய்யக்கூடியவராகவும், காரியாலயத்தை திறம்பட நிர்வகிக்கக்கூடிய வல்லமையும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரித்து பிறப்பு, கல்வி, அனுபவ சான்றிதழ் ஆகியவற்றின் போட்டோ பிரதியுடன் 23-09-92 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்**

யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி-5055)

---

யாழ்ப்பாணம். (3180)

---

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 17

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் எமைப்பிரிந்த
**பீற்றர்** (சுப்பையா குமாரவேலு - குமாரவேலு வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்)

1987ஆம் ஆண்டு திருக்கோணமலை - அநுராதபுரம் வீதியில் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட இளங்குடும்பத்தலைவி.

1990ஆம் ஆண்டு கடவானையில் எமது முகாம் ஒன்றைச் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்த போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -
**தீபன்/திலீபன்** (சண்முகவடிவேல் செல்வநாயகம் - தம்பலகமம், திருக்கோணமலை)

இதே சம்பவத்தின்போது பொறிவெடியில் சிக்கிய நிலையில் சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**கப்டன் திலகன்/அண்ணாச்சி** (வீ.ரவிச்சந்திரன் - குஞ்சுப்பந்திடல், தம்பலகமம், திருக்கோணமலை)

குரங்குப்பாஞ்சானில் எமது முகாம் ஒன்றைச் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்த போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -
**அலி** (மகாலிங்கம் கரன் - முள்ளிப்பொத்தானை)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -
**லெப்.ரேகா/பட்டு** (சுசீலா சங்கரப்பிள்ளை - மானாவளை, மட்டுவில் கிழக்கு, யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏறாவூர்/ஐயங்கேணி, தளவாய், ஆறுமுகத்தான் குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்த பெண் 2 இளைஞர்கள் உட்பட ஐந்து தமிழர்கள் - சிறிலங்காப்படையினரின் நடவடிக்கைகளினால் காணாமல் போன பழைய கல்முனையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**குகநேசன்** (ஆறுமுகம் ராசன் - சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு)
**2ம்லெப்.மில்ராஜ்** (வைரமுத்து விஜேந்திரன் - கங்குவேலி, கிளிவெட்டி, மூதூர்)
**அறிவழகன்** (சுப்பிரமணியம் வேலாயுதம் - 52, கிளிநொச்சி கிழக்கு)
சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவின் 3-வது தளபதி
**லெப்.கேணல் ஜஸ்ரின்** (பொன்னுச்சாமி பாஸ்கரன் - சாந்தா வீதி, தையிட்டி, காங்கேசன்துறை, யாழ்)
**லோறன்ஸ்** (முருகேசபிள்ளை தயேந்திரன்[கண்ணன்] - சிந்துசெட்டி, புத்தூர் மேற்கு, யாழ்.)
**சுரேன்** (சந்திரசேகர் சுரேஸ்குமார் - காங்கேசந்துறை வீதி, ஐயனார் கோயிலடி, சுன்னாகம், யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5058)

### சிந்தனைக்கு

எறும்புகள் சிறந்த குடிகள் ஏனெனில் தங்கள் இன நலனையே அவை தலையாயதாகப் போற்றுகின்றன.

— ஹென்றி டேவிட் தேவோ


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17- 09 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## பிரேமதாசாவின் இந்திய விஜயம்

சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா இம்மாதம் 24ஆம் திகதி 'சார்க்' நாடுகளுக்கான தனது விஜயத்தை ஆரம்பிக்கின்றார். மூன்றுகட்டமாக அமையும் இவ்விஜயத்தில் முதல் கட்டமாக பாகிஸ்தானுக்கும் நேபாளத்திற்கும், இரண்டாம் கட்டமாக இந்தியா, பங்களாதேஷ் பூட்டானுக்கும், மூன்றாம் கட்டமாக மாலைதீவிற்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

திரு பிரேமதாசாவின் இவ்விஜயம், பல வகைகளில் முக்கியம் வாய்ந்தது. முதலாவதாக சிறிலங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுவிஜயம் இதுவாகும். அடுத்ததாக இந்தியாவிற்கு அவர் மேற்கொள்ளும் விஜயமுமாகும். இதில், இவ்விஜயம் ஜனாதிபதி பிரேமதாசாவின் கன்னிப்பயணம் என்பதை விட இந்தியாவிற்கு அவர் மேற்கொள்ளும் விஜயம் என்பது பல விடயங்களில் முக்கியம் வாய்ந்ததாகும்.

திரு. பிரேமதாசா ஆரம்பம் முதலே இந்திய எதிர்ப்பு வாதத்தில் ஊறித்திளைத்தவராவார் இந்திய எதிர்ப்பு வாதம் பேசியே ஆட்சிக்குவந்த இவர் இந்தியாவை சர்வதேச ரீதியில் கேலிக்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கியவர் ஆவார்

1987ஆல் ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைவந்த இந்திய இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவம் என உத்தியோக பூர்வமாக வர்ணித்த முதலாவது சிங்களத் தலைவரிவராவர். அத்தோடு, இந்திய இராணுவத்தை வெளியேறி விடுமாறு இராஜதந்திர அழுத்தத்தையும் போட்டவருமாகும்.

இரண்டாவதாக விடுதலைப்புலிகளை இந்திய தடை செய்த வேளையில், சிறிலங்காவும் தடை செய்ய வேண்டும் என இந்தியா போட்ட அழுத்தத்திற்கும் பணியாது அது உள்நாட்டு விவகாரம் என தெரிவித்தவராகும். இதன் மூலம் இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு இரண்டாவது பெரும் அவமானத்தை ஏற்படுத்தினார்.

கடந்த காலத்தில் இவ்வாறாக இந்திய விரோத போக்கை திரு. பிரேமதாசா தெளிவாக வெளிக்காட்டிவந்துள்ள போதிலும், அண்மைக்காலத்தில் சிறிலங்கா - இந்திய உறவு ஓரளவு முன்னேற்றகரமாகவே உள்ளது எனலாம் அதாவது 1989, 1990 ஆம் ஆண்டுகளில் இருந்தது போன்ற ஒரு

### முதல் பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா

## கல்வி அறிவு பற்றி பிரேமதாசா பிரஸ்தாபம்

(அநுராதபுரம்)

இலங்கையின் முதலாவது பிரதமரின் கல்வி அறிவு எத்தகையது? இலங்கையின் முதலாவது பிரதமரான டி. எஸ். சேனநாயக்காவின் உருவச் சிலையை அண்மையில் கலாவெவ பகுதியில் திறந்து வைத்த பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இந்தக் கேள்விக்கு விளக்கம் அளித்துள்ளார்.

தேசத்தின் தந்தை என்று டி. எஸ் சேனநாயக்காவை வர்ணித்த பிரேமதாசா குடும்பத்தில் நான்காமவரான டி. எஸ். சேனநாயக்கா தான் கல்வியில் மிகவும் நாட்டம் குறைந்தவர் என்று குறிப்பிட்டார். மூத்தவரான எவ் ஆர். சேனநாயக்கா சட்டத்துறையில் லண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். இன்னுமொருவரான டி சி. சேனநாயக்காவும் குறிப்பிடத்தக்கவர். ஆனால் டி. எஸ். தான் வகுப்பில் எப்போதும் கடைசி மாணவராக இருந்து வந்தார்

ஒரு முறை டி. எஸ் வகுப்பில் நான்காவது இடத்தில் வந்த போது அவரது தந்தை மிகவும் மகிழ்ச்சி அடைந்தவராக காணபட்டார் ஆனால் அவரது வகுப்பிலேயே நான்கு மாணவர்கள் தான் இருந்தனர் என்ற உண்மை பிறகு தான் தெரியவந்தது.

இந்த நிலையிலிருந்து டி எஸ் முதலாவது பிரதமராக உயர முடிந்தது. தளபதிகளுக்கு போரிடுவது எவ்வாறு என்பது பற்றியோ, பொறியியலாளர்களுக்கு எவ்வாறு நிர்மாண வேலைகளில் ஈடுபடுவது என்பது பற்றியோ, ஆசிரியர்களுக்குப் போதனை புரிவது எவ்வாறு என்பது பற்றியோ போதிக்க முற்படுபவரல்ல அவர். பதிலாக அந்தந்த வேலைகளை அவரவர்களைக் கொண்டு செய்து முடித்து விடுபவர் ஆவார். அதனாலே தான் ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் விடுதலையைப்பெற அவரால் முடிந்தது என்றும் பிரேமதாசா குறிப்பிட்டார்.

### இராணுவத்தின் பிடியிலுள்ள ஆசிரியர்களுக்கு

## சம்பளம் வழங்காமை உரிமை மீறலாகும்

யாழ். மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களாகிய நெடுந்தீவு. அனலைதீவு. நயினா தீவு, எழுவைதீவு ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பிரதேசங்களில் இருக்கும் பாடசாலை அதிபர். ஆசிரியர்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாக கல்வி அமைச்சரான ஜனாதிபதியின் கவனத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவத்தால் மகஜர் மூலம்தெரிவிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இவர்களுக்கு ஒக்டோபர் 91 தொடக்கம் வேதனம்வழங்கப்படவில்லை (ஒக்டோபர் நவம்பர் 91 இற்கு மாதம் 1000 - வீதம் மொத்தமாக 2000/- வும், மார்ச்சு. 92 மாத வேதனம் மாத்திரமுமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் இவ் ஆசிரியர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்ட நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்

அதிபர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டவர்கள் நேர்முகப்பரீட்சைக்காக கொழும்புக்குச் செல்லவிடாது தடுக்கப்பட்டுள்ளனர். இதனால் போட்டிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தும் கிடைக்கின்ற பதவி உயர்வை இழக்கும் நிலையில் உள்ளனர்.

தை 92இல் ஆசிரியர் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்ட 10 ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சிக்கு செல்ல அனுமதிக்காது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். வெளி உலகுடன் எவ்வித தொடர்பும் அற்ற நிலையில் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளமையினால் சுதந்திரமான சமாதானமான சூழ்நிலையில் கற்பித்தலை செய்ய முடியாது இருக்கின்றது

நாட்டின் ஜனாதிபதி என்ற நிலையிலும் கல்வி அமைச்சர் என்ற ரீதியிலும் தங்கள் கவனத்திற்கு ஈர்த்து இங்கு பகுதியில் வாழும் ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்ட வேதன நிலுவையை வழங்குவதற்கு ஆவன செய்வதோடு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு பதவிஉயர்வு வழங்கவும் ஆசிரியர் கலாசாலைக்கு அனுமதிக்கப்பட்டவர்களுக்கு பயிற்சி அனுமதி கிடைக்கவும் ஆவன செய்வதோடு சுதந்திரமாகவும், சமாதானமாகவும் உள்ள சூழ்நிலையை ஏற்படுத்தி கற்றல் நிகழ ஆவன செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கத்தின்பொது செயலாளரால் அனுப்பப்பட்ட மகஜரில் குறிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் வடக்கு - கிழக்கு மாகாண கவர்னர் திரு நளின் செனிவரெட்ணா, கல்வி ராஜாங்க அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## ஐ.நா. அமைப்புகளில் இருந்து யூக்கோவை வெளியேற்றவேண்டும்

### - ஐரோப்பியசமூகம் கோரிக்கை

## திலீபன் எங்கே ஐயா போகிறாய்?

திலீபன்!
உன்னைத் தான் கேட்கிறேன்...
எங்கே அவசரமாய் ஓடுகிறாய்...!
சொல் தம்பி!
உனக்கு முன்னால் போய்விட்ட
மில்லரின் முகவரி தேடிக் கொண்டிருக்கிறாயா?

திலீபன்!
நீ எங்களுக்குத் தேவையடா!
உன்னுடைய அழுத்தமான விடுதலை வேட்கை
அசைகக முடியாத நெஞ்சுறுதி - தெளிவான
அரசியல் அறிவு - வலிமை மிக்க போராற்றல்
கடினமான அமைப்பு வேலைத்திறன்-வளையாத நேர்மை
களங்கமில்லாத தனிமனித ஒழுக்கம் - மிகப்பெரிய
தன்னிழப்பு உணர்வு

திலீபன் நீ எங்கள் தலைவன்
உருவாக்கிய தலைவன் - நீ
எங்களுக்குத் தேவை தம்பி

எவ்வளவு சீக்கிரமாக உன்னுடைய
அழகான சிரிப்பை எங்கள் கண்களில்
இருந்து பறித்துக் கொண்டு ஓடுகிறாய்

தமிழீழ மண்ணில் ஒவ்வொரு
தெருவிலும் நீ நடந்த உன் கால் தடம்
அழியாமல் அப்படியே இருக்கின்றது
ஆனால் நீ...
சிறகுகளைத் தூக்கிவிட்டாய்
வானத்தை அண்ணாந்து
பார்ப்பதைத் தவிர எங்களுக்கு வழி
தெரியவில்லையே தம்பி!
சாப்பிடு என்று உன்னைப்
பார்த்து எப்படிச் சொல்ல முடியும்

நெருப்பாய் நீ நிற்கிறாய்!
உன்னை நெருங்கும் தகுதி
இந்த உலகத்தில் ஒருவனுக்கும்
இல்லை!
பசியோடு கிடந்த விடுதலைத் தேவதைக்கு
தீனி போடுகின்றவனே! எங்கள் வயிறு
எரிகிறதடா!
தம்பி!

நீ எங்களுக்குப் போர் பழக்குகிறாயா?
எத்தனை கம்பீரமாய்ப் படுத்திருக்கிறாய்
உன் கழுத்தில் தொங்கும் சயனைட்குப்பி
தோற்றுப் போய் வெட்கத்தால்
போர்வைக்குள் ஒளித்து கிடக்கிறது

திலீபன்!
நீ பிரபாகரனுக்குப் பெருமை
புலிகளுக்கு எடுத்துக் காட்டு
எதிரிகளுககு எச்சரிக்கை
தமிழீழத்துக்கு வெளிச்சம்

மகாத்மா காந்தியின்
பாரத நாட்டுககு நீ அகிம்சை
கற்றுக் கொடுககிறாய்
பாவிகள் - அவர்களால்
உன்னுடைய சாவைத் தடுத்து நிறுத்த
முடியும் - ஆனால் பாவிகள் உன்னை சாகடித்துக்
கொண்டிருக்கிறார்கள்

காந்தி அடிகளின் மண்ணில்
இருந்து சாவு உன் தொண்டைக்குள்
திணிக்கப்படுகிறது

திலீபன்!
எந்த ஒப்பந்தத்தை எதிர்த்து
நீ உன் உயிரை எறிய நினைத்தாயோ - அந்த
ஒப்பந்தத்தை எங்களால் இன்று முழுமையாகப்
புரிந்து கொள்ள முடிகிறது

ஜே. ஆர் கையில் இருந்த துப்பாக்கி - ராஜீவ்
கைக்கு மாறியிருப்பதற்குப் பெயர் தான்
ஜே ஆர் - ராஜீவ் - ஒப்பந்தம்
இப்போது கடலுக்கு

அவமானத்திற்கும் உள்ளாக்கியவர் ஆவார்

1987இல் ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைவந்த இந்திய இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவம் என உத்தியோக பூர்வமாக வர்ணித்த முதலாவது சிங்களத் தலைவரிவராவர். அத்தோடு, இந்திய இராணுவத்தை வெளியேறி விடுமாறு இராஜதந்திர அழுத்தத்தையும் போட்டவருமாகும்.

இரண்டாவதாக விடுதலைப்புலிகளை இந்தியா தடை செய்த வேளையில், சிறிலங்காவும் தடை செய்ய வேண்டும் என இந்தியா போட்ட அழுத்தத்திற்கும் பணியாது அது உள்நாட்டு விவகாரம் என தெரிவித்தவராகும். இதன் மூலம் இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு இரண்டாவது பெரும் அவமானத்தை ஏற்படுத்தினார்.

கடந்த காலத்தில் இவ்வாறாக இந்திய விரோத போக்கை திரு. பிரேமதாசா தெளிவாக வெளிக்காட்டிவந்துள்ள போதிலும், அண்மைக்காலத்தில் சிறிலங்கா - இந்திய உறவு ஓரளவு முன்னேற்றகரமாகவே உள்ளது எனலாம் அதாவது 1989, 1990 ஆம் ஆண்டுகளில் இருந்தது போன்ற ஒரு மோசமான நிலையில் இல்லை எனலாம்.

இந்நிலையில் தான் திரு பிரேமதாசா தனதுஇந்தியப்பயணத்தை மேற்கொள்கின்றார். ஆனால் இவ் விஜயத்தின்போது இந்திய - சிறிலங்கா இருதரப்பு விவகாரம் குறித்துப் பேசுவதை சிறிலங்கா ஜனாதிபதி முற்றாகத் தவிர்க்க விரும்புவது போல் தெரிகிறது- "ஜனாதிபதி பிரேமதாசாவின் சார்க் நாடுகளுக்கான விஜயம் ஓர் சம்பிரதாயபூர்வமான அரசு முறைப் பயணமல்ல என்றும் 'சார்க்' சம்பந்தமான விடயங்கள் குறித்தே இவ் விஜயத்தின்போது ஆராயப்படும்" என சிறிலங்கா ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரமோ அன்றி இந்தியா -சிறிலங்கா இருதரப்பு விவகாரமோ இவ்விஜயத்தின் போது பேசப்படப்போவதில்லை என்பதே அதன் அர்த்தமாகும். இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை உண்மையானால், சிறிலங்கா ஜனாதிபதி தனது பயணத்தின் முன்பே இந்தியாவின் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு சிறிது முட்டுக்கட்டை போட்டுள்ளார் என்றே சொல்லவேண்டும் அதாவது, இலங்கை விவகாரத்தில், இந்தியாவின் அணுகு முறைக்கு சில அணைகள் போடப்பட்டுள்ளதாகக் கொள்ளலாம்.

ஆனால், திரு. பிரேமதாசாவின் விஜயத்தினை இந்தியா வெகு ஆவலாக எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது இதனை இந்தியப் பிரதமர் நரசிம்மராவே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். ஜகார்த்தாவில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் சிறிலங்காப் பிரதம மந்திரி டி பி விஜயதுங்காவைச் திரு. நரசிம்மராவ் சந்தித்தபோது, திரு பிரேமதாசாவின் விஜயத்தை தாம் ஆவலோடு எதிர்பார்த்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார் இந்தியப் பத்திரிகைகளும் பிரேமதாசா விஜயத்தை முதன்மைப் படுத்தியுள்ளன

இந்நிலையில், அரசியல் விமசகர்களினால் ஆவலாக எதிர்பார்க்கப்படும் திரு பிரேமதாசாவின் இந்திய விஜயம் எந்தளவிற்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறப் போகின்றது என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. ஆனால் சிறிலங்கா ஜனாதிபதி செயலகம்விடுத்த அறிக்கை பூரண நம்பிக்கைத்தன்மை உடையதாக இருப்பின் திரு. பிரேமதாசாவின் இவ்விஜயம் பெரும் அரசியல் முகியத்துவம் எதையும் பெற்றுவிடப்போவதில்லை மாறாக, செயலக அறிக்கை போலியானதாக இருக்குமானால், இவ்விஜயம் இந்திய -சிறிலங்கா உறவில் மட்டுமல்ல, தெற்காசிய அரசியல்போக்கிலும் புதிய பரிணாமங்களைத் தோற்றுவிக்கக்கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகப்பட எதுவுமில்லை.

---

தால் மகஜர் மூலம் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இவர்களுக்கு ஒக்டோபர் 91 தொடக்கம் வேதனம்வழங்கப்படவில்லை (ஒக்டோபர் நவம்பர் 91 இற்கு மாதம் 1000 - வீதம் மொத்தமாக 2000/- வும், மார்ச்சு 92 மாத வேதனம் மாத்திரமுமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் இவ் ஆசிரியர்கள் பொருளாதார

10 ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சிக்கு செல்ல அனுமதிக்காது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். வெளி உலகுடன் எவ்வித தொடர்பும் அற்ற நிலையில் உளவியல் ரீதியாக பாதிக்கப் பட்டுள்ளமையினால் சுதந்திரமான சமாதானமான சூழ் நிலையில் கற்பித்தலை செய்ய முடியாது இருக்கின்றது

நாட்டின் ஜனாதிபதி என்ற நிலையிலும் கல்வி அமைச்சர் என்ற ரீதியிலும் தங்கள் கவ

செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கத்தின்பொது செயலாளரால் அனுப்பப்பட்ட மகஜரில் குறிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் வடக்கு - கிழக்கு மாகாண கவர்னர் திரு நளின் செனிவரெட்ணா, கல்வி ராஜாங்க அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

---

# ஐ.நா. அமைப்புகளில் இருந்து யூக்கோவை வெளியேற்றவேண்டும்

## - ஐரோப்பியசமூகம் கோரிக்கை

(நியூயோர்க்)

ஐ.நா.அமைப்புக்களில் இருந்து யூகோஸ்லாவியாவை வெளியேற்ற வேண்டும் என ஐ நா பேரவையில் ஐரோப்பியசமூகத்தைச்சேர்ந்த உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஐ நா. பேரவைக்கூட்டம் ஆரம்பித்த போது பிரித்தானிய மற்றும் துருக்கித் தூதுவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இது குறித்த தீர்மானத்தை ஐ நா.பாதுகாப்புச்சபை இந்த வாரம் பரிசீலிக்கும் என்றும்,

யூகோஸ்லாவியாவின் எஞ்சியுள்ள நாட்டை ஐ நா.வில் இருந்து வெளியேற்றும் ஐரோப்பிய சமூகத்தின் யோசனைக்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது என்றும் அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அ. தி. மு. க.வின் ஆதரவு எயக்கு இப்போது தேவை

## - இராமமூர்த்தி விளக்கம்

(திருச்சி)

நாங்கள் கணிசமான ஒரு பெரும்பான்மையினராக இல்லை. எனவே எமக்கு அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு தேவை தி மு.க.வை ஒட்டு மொத்தமாக வாக்காளர்கள் நிராகரித்து விட்டார்கள் ஆகவே அ தி.மு.க வுக்கும் காங்கிரசுக்கும் இடையேயான தேர்தல் கூட்டை மறு பரிசீலனை செய்ய இது உகந்த தருணம் அல்ல.

இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வே இராமமூர்த்தி திருச்சியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மநாட்டில் தெரிவித்தார்.

கூட்டணியின் பங்காளிகள் என்ற வகையில் அ. தி. மு. க. வை கண்டித்து விமர்சனம் செய்வதற்கான உரிமை காங்கிரஸாருக்கு இருக்கிறது. அரசாங்கம் தவறிழைத்த போதெல்லாம் அதைச் சுட்டிக் காட்ட நாம் தவறியதில்லை. ஆனால் விமர்சனத்திற்கு ஒரு எல்லை உண்டு அ. தி மு. க. வின் நேசக் கட்சியென்ற வகையில் இது விடயத்தில் காங்கிரஸ் அந்த எல்லையைத் தாண்டவே கூடாது. மூப்பனார் சார்பானவர்களுக்கும், என் சார்பானவர்களுக்கும் இடையேயான வேறுபாடே அதுதான்? என்று தெரிவித்தார்.

# காங்கிரசின் பலத்தினால் ஜெயலலிதாமுதல்வரானார்

## -அன்பரசு அறிக்கை

(சென்னை)

இந்திராகாங்கிரஸ் மனித சக்தியையும், பணபலத்தையும் வழங்கியிருக்கா விட்டால் ஜெயலலிதா முதலமைச்சராக பதவியேற்றிருக்க முடியாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின்தலைவர்வாழப்பாடி ராமமூர்த்தி குழுவைச் சேர்ந்த எம். பி. இரா. அன்பரசு தெரிவித்துள்ளார்.

இவர் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இதுபற்றித் தெரிவித்துள்ளதாவது,

தி. மு. க. வைதோற்கடிக்க வேண்டுமென்பதற்காகத்தான் அ. தி. மு. க. காங்கிரஸ் கூட்டை நான் விரும்புகிறேன் என்றும், அ. தி மு க. வில் சேர நான் விரும்பவில்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அ. தி மு க. வில் இணைவதற்கு நான் விண்ணப்பம் செய்திருப்பதாகத் தமிழக போக்குவரத்து அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார். அவ்வாறு நான் விண்ணப்பித்திருந்தால் அந்தக் கடிதத்தை பத்திரிகையில் பிரசுரிக்கவும் நிரூபிக்கவும் செங்கோட்டையன் தவறுவாரேயானால்அவர் பதவியைத் துறக்க வேண்டும். செங்கோட்டையன் அதை நிரூபித்தால் நான் எனது எம். பி. பதவியைத் துறப்பேன். பொய்களைக் கூறி மலிவான விளம்பரம் தேட செங்கோட்டையன் முயற்சிக்கிறார் என்றும் அன்பரசு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# காவல்துறை நவீனமயம்

[சென்னை]

தமிழக காவல்துறை எண்பது கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

---

புலிகளுக்கு எடுத்துக் காட்டு
எதிரிகளுககு எச்சரிக்கை
தமிழீழத்துக்கு வெளிச்சம்

மகாத்மா காந்தியின்
பாரத நாட்டுககு நீ அகிம்சை
கற்றுக் கொடுககிறாய்
பாவிகள் - அவர்களால்
உன்னுடைய சாவைத் தடுத்து நிறுத்த
முடியும் - ஆனால் பாவிகள் உன்னை சாகடித்துக்
கொண்டிருக்கிறார்கள்

காந்தி அடிகளின் மண்ணில்
இருந்து சாவு உன் தொண்டைக்குள்
திணிக்கப்படுகிறது

திலீபன்!
எந்த ஒப்பந்தத்தை எதிர்த்து
நீ உன் உயிரை எறிய நினைத்தாயோ - அந்த
ஒப்பந்தததை எங்களால் இன்று முழுமையாகப்
புரிந்து கொள்ள முடிகிறது

ஜே. ஆர் கையில் இருந்த துப்பாக்கி - ராஜீவ்
கைக்கு மாறியிருப்பதற்குப் பெயர் தான்
ஜே ஆர் - ராஜீவ் - ஒப்பந்தம்
இபபோது கடலுக்கு
அப்டால் இருந்து சாவு நம்மைச்
சந்திக்க வருகிறது

இனிய வீரனே!
நாங்கள் உனக்கு சத்தியம்
செய்து கொடுக்கிறோம்
உன்னுடைய தலைவன் பிரபாகரன்
தலைமையில் என்றைக்கும் நாங்கள் உறுதியாக
நிற்போம்!
சுதந்திரத்துக்கு பசளை
போடுவது எப்படி என்று நீ கற்றுத்
தந்திருக்கிறாய்
உன் கனவுகளுக்கு நாங்கள் நீர் வார்ப்போம்

தம்பி திலீபன்!
நான் பேசிக்கொண்டே போகிறேன்......
ஆனால் உன் கண்களோ
மங்கல் மங்கலாக
பளிச் சென்ற உன் சிரிப்பு உன்
தடித்த உதடுகளுள் சமாதி
ஆகத் தொடங்கி விட்டதா?
எங்கே ஐயா போகிறாய்?
திலீபன் -
எங்கே ஐயா போகிறாய்?

- காசி ஆனந்தன்

---

## திலீபன்

# மூன்றாம் நாள் (17.9.92)

சூரியன் எறித்த நெடுவானில்
நீர்மேகம் வந்து உலாப்போக...
வருண பகவான் தன்கண் திறந்தான்!
சுட்டெரித்த சுடுமணலில் மழைவிழுந்து
காட்டாறு போலக் கரைபுரண்டு ஓடியது...
கூட்டமாய் நின்ற மக்களெல்லாம்
கண்ணீரை மழைக்கே காணிக்கை ஆக்கினரே!

வாடிய முகமும் வதங்கிய உடலும் - இருள்
கூடிய விழியும்...கலைந்த மயிருமென்...
பாடிய பைங்கிளி படுத்துக் கிடந்தது...
ஓடித்திரிந்த ஒருமான் ..உறங்கிக் கிடந்து!
கூடிக் களித்த குயிலது...குரலை மறந்தது!
கொள்கைக்காக உயிர் நலிந்து ..துடித்தது
கூடின்றி வாழும் தன்னினத்துக்காக ..ஒரு காகம்
கூட்டினைக் கட்ட ...தன்னலம் மறந்தது!

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

# ஈழநாதம்

# மத்திய அரசுக்கு எச்சரிக்கை
# தமிழகம் தனிநாடாக மாறும்

(சென்னை)

முப்பதாண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் பிரிவினைக் கோரிக்கைக்கு வழிவகுத்த அதே கராணிகள் இன்னமும், நிலைத்திருக்கின்றன. எனவே தமிழர்களுடனான விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கும் அதே பாதையை இந்திய மத்திய அரசும் பின்பற்றினால் தமிழ் நாடு இன்னொரு ஈழமாக மாறும் என்று முதுபெரும் தமிழறிஞரானகி. ஆ. பெ.விசுவநாதம்கூறியுள்ளார்.

சென்னைபெரியார் திடலில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் பேசிய திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் மேலும் பேசுகையில்தமிழர்களின்நலன்களை மத்திய அரசு அலட்சியம் செய்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்தார்.

## நரசிம்மராவ் அரசு ஐந்து ஆண்டு நிலைக்குமா?
### அத்வானிக்கு சந்தேகம்

(பம்பாய்)

எண்ணிக்கையளவில் நரசிம்மராவ் அரசு பெரும்பான்மை பெற்றுவிட்டாலும் கூட தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் நீடிக்குமா என்பது சந்தேகமே என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல் கே. அத்வானி கூறியுள்ளார்.

பம்பாய்சென்றிருந்தவேளை பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர் மேலும் கூறுகையில் இந்த அரசு பதவி யேற்றது முதல் ஊழல் பெருக்கெடுத்து உள்ளது. பல அமைச்சர்கள் ஊழலில் சிக்கிக் கொண்டிருக்கின்றனர் அது மட்டுமன்றி போபர்ஸ் ஊழலை மூடி மறைக்க மாதவ் சிங் சோலங்கி எடுத்தமுயற்சியானது நரசிம்மராவின் தனிப்பட்ட மதிப்புக்கே களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது, என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் தெலுங்கு தேசம், ஜார்க்கன்ட் முக்தி மோர்ச்சா, ஜனதா தளம் போன்ற கட்சிகளை திட்டமிட்ட முறையில் உடைத்தே நரசிம்மராவ் அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றது பண பலத்தைப் பயன்படுத்தி ஜனதா தளத்தை காங்கிரஸ் உடைத்துள்ளது என்ற குற்றச்சாட்டும், அரசின் நம்பிக்கைத்தன்மைக்கு களங்கத்தை ஏற்படுத்துவதாகும் என்றும் தெரிவித்தார். இதனால் தான் இந்த அரசின் மீதான நம்பகத்தன்மை களங்கப்பட்டு போயுள்ளதால் ஐந்து ஆண்டுகள் பதவியில் நீடிக்குமா என்ற ஐயம் தோன்றியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.


## ஈழநாதம் இதழின் விளம்பரப் பணிமனை

யாழ்ப்பாண நகரின் மத்தியில்

உங்கள் அபிமானத்தைப்பெற்ற ஈழநாதம் மக்கள் தினசரியில் நீங்கள் விளம்பரங்கள் தருவதற்கு வசதியாக எங்கள் பணிமனை 09-09-1992 முதல் இயங்கிவருகிறது

தொடர்புகளுக்கு:-

**தமிழ்த் தாய் புத்தகசாலை**
191, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


## தமிழீழ காவல் துறை பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் \ காவலர் தரங்கள்

தகைமைகள்:- 8ஆம் வகுப்புத் தொடக்கம் க.பொ.த. (உயர்தரம்) வரை

### நோயாளர் நன்கொடை
## கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

வேலணை உதவி அரசாங்க அதிபர்பிரிவுக்குட்பட்ட தொழுநோய், புற்றுநோய், கசரோகம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மாதங்களுக்கான நன்கொடைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இக் கொடுப்பனவுகளைப் பெறும் மக்கள் வேலணை

### ஆதாரம் வெளிவந்தது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் சமூக பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம் 8 ஆவது இதழ் வழமையைவிட கூடுதலான பக்கங்களுடன் உணவு பதனிடல் சிறப்பிதழாகவெளிவந்துள்ளது. உணவு பதனிடுதல் தொடர்பான சிறப்புக் கட்டுரைகள், பேட்டிகள், மற்றும் துணுக்குகள், வாசகர்களுக்கான குறுக்கெழுத்துப்போட்டிஆகியவற்றை உள்ளடக்கி இவ் இதழ் வெளிவந்துள்ளது.

### பழுதடைந்த

''கௌப்பி'' தானியம் தற்பொழுது இறக்கப்பட்டு வருகிறது. இத்தானியத்தின் மாதிரிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பார்வையிட்டு பழுதடைந்தது என்பதை உறுதிப்படுத்தினர் அத்துடன் இத்தானியத்தின் மாதிரிகள் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கதலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது

(க)

### திலீபன்

ஆதரவில் அல்வாய் மக்களால் பாரதிதாசன் சனசமூகநிலைய வாய்க்கால் துப்புரவு செய்யப்படவுள்ளது.

பளை வட்டப்பிரிவில் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க ஆதரவில் நூற்றுக்குமேற்பட்டோர் அரசினர் வைத்தியசாலையை திருத்தியமைக்கும் பணியில் ஈடுபடவுள்ளனர்.

கொடிகாமம் வட்டப்பிரிவில் அப்பகுதி மக்களால் கரம்பகம் வீதி திருத்தியமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

### காரியாலயம்

அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் திலீபனின் உருவப் படத்திற்கு இம் மாலைகளை அணிவித்தும் மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தினர். வீதிகளில் வைக்கப்பட்டிருக்கும் திலீபனின் உருவப்படங்களின் முன்னால் நேற்று முன்தினம் ஏற்றி வைக்கப்பட்ட தீபங்கள் அணையாமல் தொடர்ந்தும் பிரகாசித்துக் கொண்டிருந்தன திலீபனின் நினைவுப்பந்தல்களில் தமிழீழ எழுச்சிப்பாடல்களும், திலீபனின் புகழ்பெற்ற கோட்டை வாயில் பேச்சும் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

அனைத்துப் பாடசாலைகளிலும் நேற்றுக்காலை திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்தே பாடசாலையின் வழமையான

## தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது
# வழக்கு தொடர அனுமதிகோரி
# தி.மு.க. மாபெரும் ஊர்வலம்
## ஆளுநரிடம் மகஜர் சமர்ப்பிப்பு

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீதும் அவரது அமைச்சர்கள் சிலர் மீதும் வழக்குத்தொடர அனுமதிகோரும் மாபெரும் ஊர்வலம் நேற்றுச் சென்னையில் நடைபெறறது. மாநில ஆளுநரிடமே இதற்கான அனுமதி கோரப்பட்டது.

தி மு. கவின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு. கருணாநிதி இந்த ஊர்வலத்துக்குத் தலைமைதாங்கினார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவரது அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் ஒரு சில அரச அதிகாரிகள் ஆகியோர் ஊழல் செய்திருப்பதாகக் கூறும் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மகஜர் ஒன்றையும் தி. மு கழகத்தினர் மாநிலஆளுநரிடம் சமர்ப்பித்தனர்

இவர்கள் பதினெட்டுக் குற்றங்களை இழைத்திருப்பதாகவும், 200 கோடி ரூபா அளவுக்கு ஊழல் புரிந்ததாகவும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி. மு. க தலைவர் மு கருணாநிதி தலைமையில் சென்ற அக்கட்சியினர் நேற்று மாலை ராஜ் பவனில் மாநில ஆளுநரிடம் இந்த மகஜரை அளித்தனர்.

இப்பேற்பட்ட வழக்கொன்றில் இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்திருந்த கருத்துகள் தி மு. கவின் மகஜரில் மேற்கோள் காட்டப்பட்டது. இப்படியான ஒரு விடயத்தில் ஆளுநர் தானாகவே ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும். இல்லையேல் அமைச்சரவையின் சுயநலச் செய்கைகளுக்கு ஆளுநர் உடந்தையாக இருந்தார் என்று கருதவேண்டும் என்று நீதிமன்றம் அந்த வழக்கிலே கூறியுள்ளது

மாநில ஆளுநர் நாட்டின் நன்மை கருதிச்சம்பந்தப்பட்ட பிரதம கணக்காளரிடம் ஆவணங்களைக் கோரவேண்டும் பரிசீலனையை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த மகஜரில் கோரப் பட்டுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா தான் பிரதம பங்காளியாகவுள்ள ஜெயா பப்ளிக்கேசன்ஸ் என்ற பிரசுர நிறுவனத்தின் மூலமாக பெரும் விலை மதிப்புள்ள அரசுக்குரிய நிலத்தை வெறும் சில்லறை விலைக்குப் பெற்றுக் கொண்டார் என்றும், மந்திரியாக இருப்பவர் அரச சொத்துக்களை வாங்கவோ விற்கவோ முடியாது என்றவிதிமுறையை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீறி விட்டார் என்றும் ஒரு குற்றச் சாட்டுக் கூறுகிறது.

மதுரையில் அவரது கட்சி நடாத்திய வெற்றி விழாவில் முதலமைச்சர் இதனை ஒப்புக் கொண்டார் என்றும் அந்த மகஜர் கூறுகிறது.

### புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவில் முன்றலில் காலை எட்டு மணிக்கு ஆரம்பித்து வைத்திய சாலைவரை சென்று அங்கிருந்து திலீபன் வீதியூடாக அரச அலுவலகத்தை காலை பதினொரு மணியளவில் சென்றடைந்தது. பேரணியின் முடிவில் அரச அதிபரின் பிரதிநிதியிடம் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மக


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீர ஜனனம் | வீரச்சாவு |
| --- | --- |
| 03 — 04 — 1962 | 17 — 09 — 1991 |

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படை அணியின் 3-வது தளபதியும், பொறுப்பாளருமான

**லெப். கேணல் ஜஸ்ரின்**
[பொன்னுச்சாமி பாஸ்கரன்]

திதி 03 . 10 . 92

இந்தமண் மீட்டெடுக்க இன்னுயிர்
தந்தவர் வரிசையில் உன் பெயரும்
சாவினை அணைத்தொரு சரித்திரம் ஆயினும் - உன்
காவியம் களத்தில் மிளிரும்.

சாந்தா வீதி,
தையிட்டி,
காங்கேசன் துறை.

குடும்பத்தினர்

[3192]

உங்கள் அபிமானத்தைப்பெற்ற ஈழநாதம் மக்கள்
தினசரியில் நீங்கள் விளம்பரங்கள் தருவதற்கு
வசதியாக எங்கள் பணிமனை
09-09-1992 முதல் இயங்கிவருகிறது

தொடர்புகளுக்கு:-

## தமிழ்த் தாய் புத்தகசாலை

191, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழீழ காவல் துறை
## பதவி வெற்றிடங்கள்

### உப பரிசோதகர் \ காவலர் தரங்கள்

தகைமைகள்:- 8ஆம் வகுப்புத் தொடக்கம் க.பொ.த. (உயர்தரம்) வரை
உயரம்:- 5 , 6 ''
வயது:- 18—30 வரை.

மேற் கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 21. 09. 92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல் துறை அலுவலகத்திற்கு நேராக சமுகந் தரவும். தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல் துறை

(சி/5057)

## ஓராண்டு நினைவஞ்சலி



கருவறை வாயிலிலே
19 | 03 | 1975

காவியக் கோவிலிலே
17 | 09 | 1991

## வீரவேங்கை சுருளி
[தெய்வேந்திரம் வசந்தராசா]

ஈரெட்டு வயதினிலே
ஈழவரின் விடிவிற்காய்
மண்மீட்புப்போரிலே - மாவீரனானவனே
நாளைய தமிழீழ மண்ணில்
உன் நாமமும் பொறிக்கப்படும்.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.
சுதுமலை தெற்கு, — குடும்பத்தினர்
சாவல்கட்டு. (3189)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அரசின் மீதான நம்பகத்தன்மை களங்கப்பட்டு போயுள்ளதால் ஐந்து ஆண்டுகள் பதவியில் நீடிக்குமா என்ற ஐயம் தோன்றியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

### நோயாளர் நன்கொடை
## கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

வேலணை உதவி அரசாங்க அதிபர்பிரிவுக்குட்பட்டதொழுநோய், புற்றுநோய், கசரோகம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மாதங்களுக்கான நன்கொடைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இக் கொடுப்பனவுகளைப் பெறும் மக்கள் வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் வைகாசி, ஆனி ஆகிய மாதங்களுக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணமும் மேற்படிபிரிவு கிராம சேவகர் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகிறது. (க) (பா)

### பொலிஸ்

கொலை செய்து கொண்டதாக துறைமுகப் பொலிசார் தெரிவித்தனர்

நேற்று முன்தினம் காலை இவர் உயிருடன் இருந்ததாகவும், காலை உணவு எடுத்துச் சென்ற வேளையில் இவர் இறந்து கிடந்ததாகவும் பொலிசார்தெரிவித்துள்ளனர்

கடந்த மாதம் இவர் ரயில்வே வேலைத்தல கொள்ளை தொடர்பாக குற்றப்புலனாய்வு பணியக அதிகாரிகளினால் சேதவத்தை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

### கொழும்பில்

களை நிரூபித்துவிட்டு உங்களது பொருட்களை மீட்டுச் செல்லலாம் எனவும் கூறிச் சென்றுள்ளனர்.

இக் கோஷ்டியைச் சேர்ந்த ஆறுபேரும் கைது செய்யப்பட்டிருப்பதுடன் இவர்களிடமிருந்து ஐந்து லட்ச ரூபா பெறுமதியான பொருட்களையும் ஆபரணங்களையும் மீட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்-

### வவுனியா

குக்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன ஆனால்பணம் செலுத்தப்பட்டு பல மாதங்கள் ஆகிய போதிலும் பலருக்கு அடகு நகைகள் மீள அளிக்கப்படவில்லை. இதற்கு வவுனியா மக்கள் வங்கிக் கிளை அதிகாரிகள் காரணம் சொல்லத் தடுமாறுகின்றனர். (தி)

அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் திலீபனின் உருவப் படத்திற்கு இம் மாலைகளை அணிவித்தும் மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தினர். வீதிகளில் வைக்கப்பட்டிருக்கும் திலீபனின் உருவப்படங்களின் முன்னால் நேற்று முன்தினம் ஏற்றி வைக்கப்பட்ட தீபங்கள் அணையாமல் தொடர்ந்தும் பிரகாசித்துக் கொண்டிருந்தன திலீபனின் நினைவுப்பந்தல்களில் தமிழீழ எழுச்சிப்பாடல்களும், திலீபனின் புகழ்பெற்ற கோட்டை வாயில் பேச்சும் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

அனைத்துப் பாடசாலைகளிலும் நேற்றுக்காலை திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்தே பாடசாலையின் வழமையான செயற்பாடுகள் ஆரம்பமாகியது.

மேலும் திலீபனுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஒழுங்கு செய்யப்பட்ட சுழற்சியிலான அடையாள உண்ணாவிரத நிகழ்ச்சிகள் அனைத்துப் பகுதியிலும் திட்டமிட்டபடி நடைபெற்றன. நேற்றய உண்ணாவிரத நிகழ்ச்சிகளில் அதிகளவு மக்கள் கலந்து கொண்டனர் அத்துடன் திலீபனின் நினைவாக ஒழுங்கு செய்யப்படிருந்த சிரமதானப்பணிகளிலும் அதிகளவு மக்கள் பங்குபற்றினர். (க)

### யாழ்.

சுமார் 30 கோடி ரூபா அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு யாழ் செயலகம் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் யாழ் செயலகத்துக்கு திறைசேரி வழங்கவேண்டிய கட்டுநிதிக்காக மேற்படி அத்தியாவசியப்பண்டங்களை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட பணம் பயன்படுத்தப்பட்டு விட்டது. ஆனால் பதிலுக்கு திறைசேரி மூன்று கோடி ரூபாவை மட்டுமே இது வரை அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு செலுத்தியிருக்கிறது. மிகுதி 27 கோடி ரூபா நிலுவையாக உள்ளது இந் நிலுவைப் பணம் செலுத்தப்பட்டாலே யாழ் மாவட்டத்திற்கு வேண்டிய அத்தியாவசியப் பண்டங்களை அனுப்பி வைக்க முடியும் என்று அத்தியாவசிய சேவைகள் நாயகம் அறிவித்திருந்தமைதெரிந்ததே இதனால் உருவாகியிருக்கும் சிக்கல் நிலை குறித்தே நிதியமைச்சின் செயலாளருடன் யாழ் அரச அதிபர் பேசியதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன எனினும் இவ் விடயம் குறித்து எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்த தகவல்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை, (க)

ஆளுநர் தானாகவே ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும். இல்லையேல் அமைச்சரவையின் சுயநலச் செய்கைகளுக்கு ஆளுநர் உடந்தையாக இருந்தார் என்று கருதவேண்டும் என்று நீதிமன்றம் அந்த வழக்கிலே கூறியுள்ளது.

மாநில ஆளுநர் நாட்டின் நன்மை கருதிச்சம்பந்தப்பட்ட

### புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவில் முன்றலில் காலை எட்டு மணிக்கு ஆரம்பித்து வைத்திய சாலைவரை சென்று அங்கிருந்து திலீபன் வீதியூடாக அரச அலுவலகத்தை காலை பதினொரு மணியளவில் சென்றடைந்தது. பேரணியின் முடிவில் அரச அதிபரின் பிரதிநிதியிடம் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்தப்பேரணியில்முல்லைத்தீவு மற்றும் மணலாறுப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது-

### நெருக்கடி

ளது இதேவேளை சிறிலங்கா முப்படையில் சேருவதற்கு சிங்கள இளைஞர்கள் தற்பொழுது முன்வராமையால் மிகவும் கவர்ச்சிகரமான முறையில் பெரும் சலுகை அறிவிப்புகளுடன் கூடிய விளம்பரங்கள் மேற்கொள்வதில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது

அத்தோடு சிறிலங்கா விமானப்படையில் உள்ள பல உலங்குவானூர்திகளும், விமானங்களும் பல நீண்ட நாள் பாவனையினாலும், தொடர்ச்சியான பாவனையாலும் பழுதடைந்த நிலையிலும் உள்ளன. உதிரிப் பாகங்கள் அற்ற நிலையிலுள்ள விமானங்களில் சீனத் தயாரிப்பு ஜெட் குண்டுவீச்சு விமானங்களும் அடங்கும். இவற்றிற்குரிய உதிரிப்பாகங்களை உடனடியாக இறக்குமதி செய்வதற்கான முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதேவேளை இழந்த விமானங்களை ஈடுசெய்யும் வகையிலும், தேவைகளுக்கு ஏற்பவும் புதிய விமானங்களைக் கொள்வனவு செய்வதிலும் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

### நிவாரண

முடிவடைந்துவிட்டன. இதனால் ஆகஸ்ட் முதல் நிவாரணக் கொடுப்பனவுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. தற்போது அரசால் வழங்கப்படும் நிதி உலர் உணவுக்கே போதுமானதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

திதி 03 . 10 . 92

இந்தமண் மீட்டெடுக்க இன்னுயிர்
தந்தவர் வரிசையில் உன்பெயரும்
சாவினை அணைத்தொரு சரித்திரம் ஆயினும் - உன்
காவியம் களத்தில் மிளிரும்.

சாந்தா வீதி, குடும்பத்தினர்
தையிட்டி,
காங்கேசன் துறை. [3192]

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
### இழுவைப் பெட்டியுடனான டிராக்டர்களை
## பதிவுசெய்தலும், வண்டல்மண் விற்பனையும்

1. யாழ்ப்பாண மாநகரசபையின் சேவைகளுக்கு இழுவைப் பெட்டியுடனான டிராக்டர்களை வழங்கவிரும்பும் உரிமையாளர்கள் எதிர் வரும் 22 - 09 - 92 ஆம் திகதிக்கு முன்பதாக பதிவுக் கட்டணமாக ரூபா 100/-ஐ செலுத்தி சபையுடன் தம்மைப் பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

2. யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட குளங்களிலிருந்து அகற்றப்படும் விவசாயத்திற்குகந்த வண்டல் மண் விற்பனைக்குள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் டிராக்டர் பெட்டி ஒன்றுக்கு (3/4 கியூப்) செலுத்தத் தயாராகவுள்ள தொகையை 25-09-92 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை மராமத்துப் பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
[சி-5062]

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16 - 09 - 1992

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 16-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5655

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
24-6639, 26-5143, 26-6075, 28-1928, 28-732, 28-1677, 27-8515, 41-9997, 25-2511, 42-3239, 40-7584, 24-6699, 27-6821, 27-4070, 24-8588, 26-7393, 27-4885.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
24-1685, 26-547, 41-9480, 41-9166, 41-5605, 24-8785, 42-3726, 27-6583, 26-7307, 26-767, 24-4560, 41-1665, 24-5437, 24-207, 26-8878, 26-6309, 26-5814, 24-454, 24-5454.